# LATAR NEWS ARTICLES

## Newspaper: Harian Tamil Malaysia Nanban

**Published: Friday June 24, 2011**

**Title: KL-Kuala Selangor Highway Free of Charges before 31st August**

# கோலாலம்பூர்-கோலசிலாங்கூர் நெடுஞ்சாலை திறப்பு



கோலாலம்பூர், ஜூன் 24–

கோலாலம்பூர்–கோலசிலாங்கூர் விரைவுச் சாலை (லாத்தார்) தற்போது திறக்கப்பட்டுள்ளது. ஆகஸ்டு 31ஆம் தேதி வரை டோல் வசூலிக்கப்படாது. ஆகஸ்டு முதல் தேதிக்குப் பிறகு வாகனங்களுக்கு 2 வெள்ளி டோல் விதிக்கப்படும்.

இந்த விரைவுச் சாலை 33 கிலோ மீட்டர் தூரம் கொண்டதாகும். கோலாலம்பூரிலிருந்து–கோலசிலாங் கூருக்கு 30 முதல் 40 நிமிடங்களுக்குள் சென்று அடைந்துவிடலாம். பழைய சாலையை பயன்படுத்தினால் 1 1/2 மணி நேரமாகும் என்று பொதுப்பணி அமைச்சர் டத்தோ சஷிமான் அபு மன்சோர் கூறினார்.

தாமான் ரிம்பா டெம்ப்ளர் டோல் சாவடியில் அந்த விரைவுச் சாலையை திறந்து வைத்த பிறகு அவர் இதனைக் கூறினார்.